


மாணவர்கள் கருத்துரை வழங்குதல்

துறைப் பொறுப்பாளர் முதல்வர்




மாணவர்களுக்கு நூல் வழங்கி சிறப்பு செய்தல்




மாணவர்கள் கருத்துரை வழங்குதல்




தமிழாய்வுத்துறைப் பொறுப்பாளர் முனைவர்.சி.பிரபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்




மாணவர்களுக்கு நூல் வழங்கி சிறப்பு செய்தல்




தமிழாய்வுத்துறைத் தலைவர் முனைவர்.சோம.இராசேந்திரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்




ஒருங்கிணைப்பாளர் முனைவர்.எம்.மீனாட்சிசுந்தரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்




Er.பொன்.பாலசுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்




துணை முதல்வர் முனைவர்.குல.தி.தமிழ்மணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்




மாணவி.செல்வி. மு.மோனிசா வரவேற்புரை வழங்கினார்.




சிறப்பு விருந்தினருக்குப் பரிசு வழங்குதல்

## தமிழாய்வுத்துறை

### இளங்கலை மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்களின் புதுமுக வரவேற்பு விழா



Er.பொன்.பாலசுப்பிரமணியன் அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தார்.




முனைவர்.சோம.ராசேந்திரன் அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்தார்

அதன்பிறகு தமிழாய்வுத்துறைத் தலைவர் முனைவர் சோம.இராஜேந்திரன் வாழ்த்துரை வழங்கினார். ஏவுகணை சோதனை செய்வதை விட ஆசிரியர் பணி கடினமானது என்றும் நம் கல்லூரியில் முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு மாணவ, மாணவிகள் 17பேர் சேர்ந்தது பல்கலைக் கழக அளவில் சிறப்பு மிக்கதாக அமைந்துள்ளது என்றும் தம் ஆசிரியர் பணியின் அனுபவங்களையும் மகாபாரதக் கதைகளையும் கூறி மாணவ, மாணவிகளுக்கு எடுத்துரைத்தார்.

அவரைத் தொடர்ந்து தமிழாய்வுத்துறைப் பொறுப்பாளர் முனைவர் சி.பிராபகரன் அவர்கள் வாழ்த்துரையில் தலைகுனிந்து என்னைப்படி நான் வாழ்வில் உன்னைத் தலைநிமிர்ந்து நடக்க வைப்பேன் என்று புத்தகத்தை நேசித்தால், வாசித்தால் இவ்வுலகையே ஆளலாம் என்னும் செய்தியைக் கூறி மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். இதனையடுத்துச் சிறப்பு விருந்தினர்கள் முதலாம் ஆண்டு இளங்கலை மற்றும் முதுகலை மாணவ, மாணவிகளுக்குப் புத்தகங்கள் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்வின் இறுதியாக இளங்கலைத் தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி சீ.கமலஸ்ரீ நன்றியுரை ஆற்றினார்.

இந்நிகழ்வினைத் தமிழாய்வுத்துறை முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி கௌசல்யா மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவி சு.இராஜேஸ்வரி ஆகியோர் மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்கள்.

துறைப் பொறுப்பாளர் ஒருங்கிணைப்பாளர் முதல்வர்



## தமிழாய்வுத்துறை

## இளங்கலை மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்களின் புதுமுக வரவேற்பு விழா - அறிக்கை

இடம்: குளிர்மை அரங்கம் நாள் : 04.08.2023

திருச்சிராப்பள்ளி புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரியில் (02.08.2023) புதன்கிழமை அன்று இளங்கலை மற்றும் முதுகலை முதலாமாண்டு மாணவர்களின் புதுமுக வரவேற்பு விழா தமிழாய்வுத்துறைச் சார்பாக நடைபெற்றது. இவ்விழாவின் தொடக்கமாகக் கல்லூரியில் நிறுவப்பட்டிருக்கும் "வான்புகழ் கொண்ட ஐயன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்குக்" கல்லூரித் தலைவர் பொன்.பாலசுப்பிரமணியம் அவர்கள் மாலை அணிவித்தார். அவரைத் தொடர்ந்து துணை முதல்வர் தமிழ்மணி அவர்களும், சுயநிதிப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் மு.மீனாட்சிசுந்தரம் அவர்களும் மற்றும் பேராசிரியர்கள், புதுமுக மாணவ, மாணவிகளும் மலர் தூவி வணங்கினார்கள்.

இந்நிகழ்வின் தொடக்கமாக முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு மாணவி மு.மோனிசா சிறப்பு விருந்தினர்களை வாழ்த்தி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களைச் சிறப்பு செய்யும் விதமாக நூல்கள் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேரு நினைவுக் கல்லூரியின் தலைவர் பொன்.பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியின் நோக்கத்தை எடுத்துக் கூறி மாணவ, மாணவியர்களை ஊக்குவித்துப் பேசினார். அவரைத் தொடர்ந்து நேரு நினைவுக் கல்லூரியின் துணைமுதல்வர் தமிழ்மணி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் சொற்பொழிவில் நூல் வாசிப்பின் சிறப்பினையும் பழந்தமிழர்கள் கதை விரும்பியாகவும் கதை சொல்லியாகவும் வாழ்ந்துள்ளார்கள் என்று மாணவர்களுக்கு வாசிப்புத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

மேலும் சுயநிதிப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு.மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசுகையில் ரோசா பூக்கள் வேண்டுமென்றால் அதற்கு ரோசா செடிகள் தேவை. அதுபோல் வெற்றி தேவை என்றால் கல்வி என்பது வாழ்வில் அவசியமானது என்று மாணவர்களை ஊக்குவித்துப் பேசினார்.